செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-50 பிப்ரவரி, 2025

வங்கிகளில் தேவையான ஊழியர் நியமனம் - வாரத்தில் ஐந்து நாள் வங்கிச் சேவை கோரிக்கைகளை வலியுறுத்தி நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டம்

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் முடிவு

வங்கி ஊழியர்களின் நிலுவையில் உள்ள தீர்க்கப்படாத முக்கிய கோரிக்கைகள் குறித்து விவாதிக்கவும், அவற்றை வலியுறுத்தி போராட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்யவும், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகளின் கூட்டம் **15-01-2025** அன்று கொல்கத்தாவில் நடைபெற்றது.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மும்பை மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின்படி, பல கிளைகளில் எழுத்தர் மற்றும் துணைப் பணியாளர்கள் பற்றாக்குறை கடுமையாக இருப்பதால், வங்கிகளில் போதுமான ஊழியர்களை நியமனம் செய்திடக்கோரி நாடு தழுவிய போராட்டத்திற்கு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அறைகூவல் விடுத்திருந்தது. இருப்பினும், பனிரெண்டாவது இருதரப்பு ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காரணத்தால், நம் போராட்டத் திட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

போதுமான ஊழியர் நியமனம் வேண்டி கடந்த வருடம் நாம் அறிவித்திருந்த வேலை நிறுத்த அறைகூவலின் காரணமாக மத்திய தொழிலாளர் ஆணையர் அறிவுறுத்தலின்படி இப்பிரச்சினை குறித்து விவாதிக்க **IBA** ஒப்புக்கொண்டபோதிலும் இதுவரை ஆக்கபூர்வமான விவாதங்களை **IBA** துவக்கவில்லை.

வங்கிக் கிளைகளில் ஊழியர் பற்றாக்குறை காரணமாக வேலைப்பளு அதிகரித்து அதன் விளைவாக வாடிக்கையாளர் சேவை பெருமளவில் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ள நிலையில், பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் போராட்டங்களை நடத்திட நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.



- *அனைத்து வங்கிகளிலும் எழுத்தர் மற்றும் துணைநிலை ஊழியர் காலிப்பணியிடங்களில் நிரந்தர ஊழியர்களை உடனடியாக நியமனம் செய்திட வேண்டும்.*
- *வங்கிகளில் நிரந்தர வேலைகளை **OUTSOURCING** செய்வதை நிறுத்திட வேண்டும்.*
- *வங்கிகளில் வாரத்திற்கு **5** நாட்கள் வேலைத் திட்டத்தினை உடனே அமல்படுத்த வேண்டும்.*
- *வங்கிக் கிளைகளில் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்திட வேண்டும்.*
- *வங்கிக் கிளைகளில் பணிபுரியும் தற்காலிக ஊழியர்களை நிரந்தரப் பணியிடங்களில் நியமனம் செய்திட வேண்டும்.*
- *வங்கி ஊழியர் பணிவிதி முறைகளில் **DFS** இன் தலையீட்டை நிறுத்துதல் வேண்டும்*
- *பொதுத்துறை வங்கிகளின் சுயாட்சியை உறுதி செய்திட வேண்டும்.*
- *பொதுத்துறை வங்கிகளில் ஊழியர்/அதிகாரிகள் இயக்குநர் பதவிகளை நிரப்பிட வேண்டும்.*
- *வங்கி முகமையாளர் (**BC**) பணிவிதிகள் சீரமைக்கப்பட வேண்டும்.*
- *அனைத்து வங்கி ஊழியருக்கும் பழைய ஓய்வூதியத் திட்டம் அமல் படுத்தப்பட வேண்டும்.*

மேற்கண்ட கோரிக்கைகள் குறித்து அனைத்து உறுப்பினர்களிடமும் விளக்கிடும் வகையில் ஊழியர் கூட்டங்களை நடத்திட வேண்டும் என்று நிர்வாகக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் விரைவில் துவங்கவிருக்கும் நிலையில் வேலை நிறுத்தம் உட்பட்ட போராட்டத் திட்டங்களை அறிவிக்கவும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் முடிவு செய்துள்ளது.

பிற வங்கித் தொழிற் சங்கங்களுடன் கலந்தாலோசித்து போராட்டத் திட்டங்கள் மற்றும் வேலைநிறுத்த தேதிகளை இறுதி செய்யவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அனைத்துப் போராட்டங்களையும் **UFBU** அமைப்பின் அனைத்து சங்கங்களும் ஒன்றிணைந்து பங்கேற்கும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் விரைவில் அறிவிக்கவுள்ள போராட்ட திட்டங்களை முழுமையாக வெற்றிபெறச் செய்யும் வகையில் அனைத்து வங்கிச் சங்கங்களும் ஊழியர் கூட்டங்களையும் பிரச்சார நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்திட சம்மேளனம் கேட்டுக் கொள்கின்றது.

மதுரை மற்றும் சென்னை நகரில் போராட்ட விளக்க பிரச்சாரக் கூட்டங்கள்:

நிலுவையில் உள்ள நமது கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அறிவிக்கவுள்ள போராட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கும் வகையில் முதற்கட்டமாக மதுரையிலும், சென்னை நகரிலும் நமது உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது.



மதுரை ராமநாதபுரம் வங்கி ஊழியர் சங்கம் சார்பில் **27-01-2025** அன்று மதுரையில் நடைபெற்ற கூட்டத்தில் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். மதுரை நகரில் பல்வேறு வங்கிகளில் பணியாற்றும் நமது உறுப்பினர்கள் பெருமளவில் இச்சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.



29-01-2025 அன்று தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் சென்னையில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் மற்றும் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் ஆகியோர் கலந்து கொண்டு நம் போராட்டத்தின் அவசியம் குறித்து விளக்கவுரை ஆற்றினர்.



பொதுத்துறை வங்கிகளில் போதுமான ஊழியர் நியமனம் உடனடித் தேவை ஏன் ?

ஆண்டு	எழுத்தர்	துணைநிலை ஊழியர்
2013	3,98,801	1,53,628
2024	2,46,965	94,348
குறைந்துள்ள ஊழியர் எண்ணிக்கை	1,51,836	59,280

வங்கிகளின் வியாபாரம் உயர்ந்துள்ளது
வங்கிகளின் இலாபம் பெருகியுள்ளது
வங்கிக் கிளைகள் கூடியுள்ளது
அதனால்
கிளைகளில் வேலைப்பளு அதிகரித்துள்ளது
ஆனால்

வங்கிக் கிளைகளில் ஊழியர் எண்ணிக்கையோ குறைக்கப்பட்டுள்ளது

வங்கிகளில் தேவையான ஊழியர் நியமனம் வேண்டி நடைபெறும்

நாடு தழுவிய வேலை நிறுத்தத்தை வெற்றி பெறச் செய்வோம்

தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சத் துடிக்கும் கார்பொரேட் முதலாளிகள் மத்திய தொழிற்சங்கங்கள் - மகளிர் அமைப்புகள் கடும் எதிர்ப்பு

இந்திய தொழிலாளர்களின் பணி நேரத்தினை வாரத்திற்கு **90** மணிநேரமாக நீட்டிக்க வேண்டும் என்று லார்சன் **&** டுப்ரோ லிமிடெட் (**L & T**) நிறுவனத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான **S N** சுப்பிரமணியன் கூறிய கருத்தினை மத்திய தொழிற்சங்கங்கள் கடுமையாக கண்டித்துள்ளன.



மேலும், ஞாயிற்றுக்கிழமைகளில் “வீட்டில் உங்கள் மனைவியின் முகத்தையே எவ்வளவு நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பீர்கள்’ என்றும், ஊழியர்கள் விடுமுறை தினங்களிலும் வேலைக்கு வந்தால் மட்டுமே இந்தியப் பொருளாதாரம் மேம்படும் என்றும் கருத்து தெரிவித்துள்ள **L&T** கார்பொரேட் நிறுவனத் தலைவரின் அறிக்கை அவருடைய ஆபாசமான மன நிலைமையினை பிரதிபலிப்பதாக பெண் உரிமை ஆர்வலர்கள் உட்பட சமூகத்தின் பல்வேறு பிரிவுகளின் அமைப்புகள் விமரிசனம் செய்துள்ளன.

L&T சுப்பிரமணியனின் சமீபத்திய இந்தக் கருத்து, சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மூலம் வாரத்திற்கு **70** மணிநேரமாக ஊழியர்களின் வேலை நேரத்தை அதிகரிக்க வேண்டும் என்று **INFOSYS** நிறுவனர் **N R** நாராயண மூர்த்தி சில மாதங்கள் முன்பு வெளியிட்ட யோசனையை ஒத்திருப்பதாக மத்திய தொழிற்சங்கங்கள் தங்களுடைய கண்டனக் குரலை எழுப்பியுள்ளன.

என் இலாபமே என் குறிக்கோள் - தொழிலாளர் நலன் பற்றி சிந்திக்க மறுக்கும் கார்பொரேட் தொழிலதிபர்கள்:

சீனா, ஐரோப்பா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட அதிக உற்பத்தித் திறன் கொண்ட நாடுகளுடன் ஒப்பிடும்போது, இந்தியத் தொழிலாளர்கள் மிக நீண்ட நேரம் வேலை செய்கின்றனர். வேலை நேரத்தினை மேலும் நீட்டிப்பது இந்தியத் தொழிலாளர்களின் உடல்நலம் மற்றும் சமூக வாழ்க்கையில் மிகவும் மோசமான பாதிப்பினை ஏற்படுத்தும்.

தற்போது, இந்தியத் தொழிலாளர்களால் வாரத்திற்கு **48** மணிநேரம் என்ற அளவில் பணியாற்றி நாட்டின் வளங்கள் உற்பத்தி செய்யப்பட்டாலும், அச்செல்வங்கள் அனைத்தும் அதானி, அம்பானி, போன்ற கார்பொரேட் முதலாளிகளால் உருவாக்கப்பட்டவையே என்பதுபோன்ற பிம்பத்தினை ஏற்படுத்தி, மக்களை ஏமாற்றும் தந்திரங்கள், கார்பொரேட் முதலாளிகளாலும், ஆட்சியாளர்களாலும் ஊக்குவிக்கப்படுகின்றது.

L&T சுப்பிரமணியனின் இந்த அறிக்கையைக் கண்டித்து, அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (**AITUC**) பொதுச் செயலாளர் தோழர் அமர்ஜீத் கவுர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், இந்திய நாட்டில் அதிகரித்து வரும் வேலையின்மை காரணமாக இளைஞர்களின் ஆற்றல் வீணாகிறது என்றும், சமீபத்திய கணக்கெடுப்புகளின்படி இந்தியாவில் வேலையின்மை மிக மோசமான உச்சத்தினை அடைந்துள்ளது என்றும் கூறியுள்ளார். ஆனால் இவை குறித்து சுப்பிரமணியன் மற்றும் மூர்த்திகளுக்கு எந்தக் கவலையும் இல்லை என்றும் அவர் சாடியுள்ளார்.



தொழிலாளர்களின் உழைப்பினை உறிஞ்சத் துடிக்கும் இத்தகைய கார்பொரேட் முதலாளிகள் மற்றும் இவர்களுக்கு சாதகமான ஒன்றிய ஆட்சியாளர்களின் சுரண்டல்களினால், இந்தியாவில் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே நிலவும் இடைவெளி அதிகரித்து, அது **80** ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையை எட்டியுள்ளது மிகவும் வேதனையானது என்றும் தோழர் அமர்ஜீத் கவுர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

"இந்திய தொழிலாளர்களின் இரத்தத்தையும் வியர்வையையும் குடிப்பதற்கு கார்பொரேட் முதலாளிகளிடையே ஒரு மோசமான போட்டி நிலவுவதாகவும், மேலும் அவர்களுக்கு மோடி தலைமையிலான கார்ப்பரேட்-வகுப்புவாத தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி உடந்தையாகவும் ஒத்துழைப்புடனும் உள்ளது" என்று **CITU** பொதுச் செயலாளர் தோழர் தபன் சென் தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தொழிலாளரின் குடும்ப வாழ்வு சீரழிந்தால் எனக்கென்ன - என் தலைமுறை தழைக்க என் செல்வத்தைப் பெருக்கு - கார்பொரேட் முதலாளிகளின் குரூர எண்ணம்:

AITUC-யின் அகில இந்திய உழைக்கும் பெண்கள் மன்றம், **L&T** சுப்பிரமணியனின் அறிக்கை, ஆணாதிக்கமானது, அவதூறானது மற்றும் கண்டிக்கத்தக்கது என்று கூறியுள்ளது. **L&T** சுப்பிரமணியனின் இந்த மன வெளிப்பாடு, பெண்களை வெறும் அலங்கரிப்புகளாக தரம் தாழ்த்தி, அவர்களுடைய கண்ணியத்தை சிதைப்பதோடு, பெண்களின் சுயாட்சி மற்றும் முகமையை அவமதிக்கிறது என்றும் கண்டித்துள்ளது.

மனைவிகள் அலங்கரிக்கப்படக் கூடாது, பார்க்கப்படக் கூடாது என்று கூறும் **L&T** சுப்பிரமணியன்,



ஒரு பெண் என்பவள் சுதந்திரமானவள் என்பதையும், அப்பெண்ணுடைய அடையாளம் அவளுடைய உறவுகளால் வரையறுக்கப்படவில்லை என்பதையும் அறிந்திருக்க வேண்டும் என்று கண்டனம் தெரிவித்துள்ளது. சக்தி வாய்ந்த பதவிகளில் உள்ள இத்தகையோர், தங்களுடைய எண்ணங்களை ஆரோக்கியமான முறையில் வளர்த்துக்கொள்ளத் தவறுவது வருத்தமளிக்கிறது என்றும் அந்த அறிக்கை கூறுகின்றது.

ஆனால், தொழிலாளர்கள் வரம்பில்லாத நேரம் உழைப்பதன் மூலம் பெருகும் இலாபத்தினை தங்களுக்கு குவித்துக் கொள்வதுதான், கார்ப்பரேட் முதலாளிகளுக்கு, தேசத்தின் முன்னேற்றமாகத் தெரிகிறது.

இந்தியத் தொழிலாளர் சட்டங்களில் வாரமொரு நாள் விடுமுறையோடு, வேலை நேரம் வாரம் **48** மணி நேரத்தைத் தாண்டக்கூடாது என்ற வரம்பு உள்ளது. ஆனால் நடைமுறையிலோ, காலாவதியான விதிமுறைகள், சட்டங்களின் வலுவற்ற செயலாக்கம், கார்ப்பரேட்டுகளின் அதிகரித்து வரும் செல்வாக்கு ஆகிய காரணிகளால், பல நிறுவனங்களில் ஒரு நாளில் பனிரெண்டு மணி நேர வேலை என்பது எழுதப்படாத நடைமுறையாக திணிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் தொழில்-வணிக ஏடாகிய ***FORBES*** தனது ஆண்டறிக்கையில்(2023) உலகின் மிகப் பெரிய 15 நிறுவனங்களில் எதிலுமே இத்தகைய நீண்ட நேர உழைப்பு கட்டாயமானதாக இல்லை என்று சுட்டிக் காட்டியுள்ளது. பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பும், உலக சுகாதார நிறுவனமும் கூட்டாக மேற்கொண்ட ஆய்வின்படி, கூடுதல் நேரம் வேலை செய்வதால் உயிரிழப்பவர்கள் மிக அதிகமாக உள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா சேர்ந்திருக்கிறது என்ற தகவல் கவலை அளிப்பதாக உள்ளது.

தொழிலாளர்கள் தற்போது உழைத்திடும் 48 மணி நேர பணி வேலை போதாது என்ற மனநிலை தொழிலதிபர்கள் மத்தியில் உருவாகியுள்ளதையே நாராயணமூர்த்தி மற்றும் சுப்ரமணியன் போன்றோரின் பேச்சுகள் வெளிப் படுத்துகின்றன. கார்பொரேட் முதலாளிகளின் இத்தகைய குரூர எண்ணங்கள் தொழிலாளருடைய உரிமைகளை வேரறுக்கும் நோக்கத்துடன் உள்ளதோடு, அவர்களுடைய உடல் நலன் மற்றும் மன நலத்தினை சிதைப்பதாகவும் உள்ளது.



எட்டு மணி நேர உழைப்பு, எட்டு மணி நேர உறக்கம், இவற்றோடு எட்டு மணி நேர குடும்ப வாழ்வு என்பதே உலகத் தொழிலாளர் இயக்கம் போராட்டங்களாலும் தியாகங்களாலும் வென்றெடுத்த உரிமை ஆகும்.

இந்த அடிப்படையான உரிமைகளை எத்தகைய தியாகம் செய்தேனும் பாதுகாத்து, தங்கள் உரிமைகளை தக்கவைத்து, அதன் மூலம் வருங்கால தலைமுறையும், தொழிலாளர்களும் இத்தகைய தாக்குதல்களை எதிர்கொண்டு முறியடித்து, பாதுகாப்புடன் வாழ்வதற்கு தொழிற்சங்கங்களும், தொழிலாளர்களும் தீவிரமாகப் போராட உறுதி ஏற்றுக் கொள்ளக் கூடிய தருணம் இது என்பதை இத்தகைய கார்பொரேட் பேர்வழிகளின் அறிவிப்புகள் நமக்கு உணர்த்துகின்றது.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின்
வங்கிகளில் பணியாற்றும் பெண் ஊழியர்களின்
9வது தேசிய மாநாடு
8 மற்றும் 9 பிப்ரவரி 2025 - அகமதாபாத்

